**செய்தி வெளியீடு எண்: 322** **நாள் : 09.04.2010**

# <u>செய்திக்குறிப்பு</u>

**தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் 6வது கூட்டம் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (9.4.2010) நடைபெற்றது.**

தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் ஆறாவது கூட்டம் இன்று (9.4.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சித் துறை; அரசு செயலர், நெடுஞ்சாலைத் துறை; ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை; தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.ஆதிசங்கர், திரு.ஈ.ஜி.சுகவனம்; சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.கே.காயத்திரி, திரு.எஸ். குணசேகரன்; மாவட்ட ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி. அஜிதா மனோ தங்கராஜ், பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், தலைவர், உழவனின் நில உரிமை இயக்கம், செயலாளர், காந்திகிராம் டிரஸ்ட்; கடலூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்; திருமதி. பா.சாந்தி; க.பரமத்தி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.பி.சரஸ்வதி, திண்டுக்கல் – செட்டிநாயக்கன் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.பி.செல்வகணேசன்; சேலம் – குட்டப்பட்டி ஊராட்சித் தலைவர் திரு.ஆர்.நாராயணன், கோவை – சின்னம்பாளையம் ஊராட்சித் தலைவர் திரு.என்.தேவராஜன், விருதுநகர்– டி.கரிசல்குளம் ஊராட்சித் தலைவர் திரு.சு.திலக்ராஜ், விழுப்புரம் – மாத்தூர் ஊராட்சித் தலைவர் திரு.இரா.இராஜன், திருச்சி–திருப்பராய்த்துறை ஊராட்சித் தலைவர் திரு.ஆர்.பாலமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 16.9.2009 அன்று நடைபெற்ற நான்காவது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீதான மேல்நடவடிக்கை குறித்தும், தமிழ்நாடு மாநில வேலை உறுதித்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகள், வழங்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புகள், திட்ட நிதி பயன்பாடு ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

பிப்ரவரி 2006ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 13.05.2006 வரையில் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிப்பட்ட தொகையானது, மார்ச் 2010 வரையில் 3,352 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் 2009–10ஆம் ஆண்டில் மட்டுமே 1,676 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூபாய் 80ஐ வழங்கி வந்ததை, 1.1.2010 முதல் ரூபாய் 100 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பொதுப் பணித் துறையின் விலைப் பட்டியலை விட சாதாரண பணிகளுக்கு 100 சதவீதம் கூடுதல் ஊதியமும், புதர் மற்றும் முட்செடிகளை அகற்றும் பணிகளுக்கு 150 சதவீதம் கூடுதல் ஊதியமும் தற்போது வழங்கப்பட்ட வருகிறது.

இத்திட்டத்தினை 2008–09ஆம் ஆண்டில் திறம்பட செயல்படுத்தியமைக்காக, விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரு மாவட்டங்களுக்கு 2.2.2010 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் நிகழ்ச்சியில் மத்திய அரசால் விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இத்திட்ட செயல்பாட்டில் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டின் மீதான விசாரணை மேற்கொண்டு அளித்த தீர்ப்பில், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு.கே.ஜி.பாலகிருஷ்ணா மற்றும் நீதிபதிகள் திரு.தீபக் வர்மா மற்றும் திரு. பி.எஸ்.சவ்யான் ஆகியோர், இத்திட்ட செயலாக்கத்தில் தமிழ்நாடு மற்றும் மேகாலயா ஆகிய இரு மாநிலங்கள் அதிக அக்கறையுடன் செயல்படுவதாக பாராட்டி, மற்ற மாநிலங்களும் இவ்விரு மாநிலங்களின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி திறம்பட செயல்பட வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை–9.**